பத்திரிக்கைச்செய்தி

பட்டா நகல் வழங்குவதற்கு லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

புகார்தாரர் திரு.மாசிலாமணி, செந்துறை கிராமம், நத்தம் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நிலத்தின் பட்டா, சிட்டா, அடங்கல், வரைபட நகல் கேட்டு செந்துறை கிராம நிர்வாக அலுவலகம், நத்தம் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.பவுருதீன், கிராம நிர்வாக அலுவலர், செந்துறை கிராமம், நத்தம் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ,1,200/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திண்டுக்கல் பிரிவில் புகார் மனு அளித்துள்ளார். புகார் மனுவின் மீது மேல்நடவடிக்கை எடுத்து கடந்த 22.08.2007ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கையின் போது புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.1,200/-யை திரு.பவுருதீன், கிராம நிர்வாக அலுவலர், பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது தலைமை நீதித்துறை நடுவர் மன்றம், திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 26.05.2025 திரு.பவுருதீன், கிராம நிர்வாக அலுவலருக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ.10,000/. அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.